மாகாணத் திறைசேரி - வடமாகாணம்
Provincial Treasury – Northern Province
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

My No:-NP/09/FRM/ 2009 Date:- 12.03.2009

மாகாண திறைசேரி சுற்று நிருப இல:- PT/09(II)/2009

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## வரைபு மதிப்பீடு - 2010

04.03.2009ம் திகதியும் PT/09/2009 இலக்கமும் கொண்ட மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்படி சுற்றுநிருபத்தின் பந்தி 4.1.1.1 இன் பிரகாரம் ஆளணிக்கான சம்பள ஒதுக்கீடு செய்யப்படும் பொழுது அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கான சம்பளங்களை தயாரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஆளணிக்குப் புறம்பாக மேலும் நிதி ஆணைக்குழுவின் சிபார்சுக்கு இணங்க முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தால் மேலதிக ஆளணி அனுமதிக்கப்பட்டு பெற எதிர்பார்க்கப்பட்டது. அதில் காலதாமதம் ஏற்படுவதால் பின்வரும் நடைமுறையை கையாளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

- தற்போது சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட ஆளணி இதில் எத்தொகை கூடுதலாக உள்ளதோ அத்தொகையை அனுமதிக்கப்பட்ட ஆளணியாகக் கருத்திற் கொண்டு வரைபு மதிப்பீடு தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆ.செல்லத்துரை,
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி.
பிரதம செயலாளருக்காக.

பிரதிகள்:-
1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வமா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வமா

} தகவலுக்காக

Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct 060-2264892 Mobile – 077-3868570 General No – 060 – 2266503
Fax - 026 – 2226953 E-Mail – nptreasury@sltnet.lk